**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 562/2022.**
**வழக்கு சாட்சி – அ.சா. 8 (பட்டியல் சாட்சி –8).**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. செந்தில்குமார். | ஜாதி | |
| தந்தை பெயர் | வேலுச்சாமி. | தொழில் | காவல் உதவி ஆய்வாளர் (பணி ஒய்வு). |
| கிராமம் | தேக்கம்பட்டி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 61/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.07.2026.

**(1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**அரசுத் தரப்பு முதல் விசாரணை:–**

நான் தற்போது, தேக்கம்பட்டியில் குடியிருந்துகொண்டு, தமிழ்நாடு காவல் துறையில் காவல் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 20.04.2018 ஆம் தேதி தேனி மாவட்டம், அல்லிநகரம் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்தபோது, அன்றைய இரவு 22.00 மணிக்கு அல்லிநகரம் வெள்ளையன் தெருவைச் சேர்ந்த சுரேஷ் என்பவரின் மனைவி ரேவதி என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த புகாரினைப் பெற்று, நிலைய மனு ரசீது எண். 109/2018–இன் படி பதிவு செய்தேன். நான் பதிவு செய்த அந்த மனு ரசீது **அ.சா.ஆ.4** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. (எதிரிகள் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). புகார் மனுவை காவல் உதவி ஆய்வாளர் அவர்களின் விசாரணைக்கு வைத்தேன். மேற்படி காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

(1) என்னிடம் கொடுக்கப்பட்ட புகார் மனுவில் புகார்தாரரின் கையாப்பத்திற்கு அருகில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். புகாரில், 3–வது வரியில் அதே என்பது இடைச்செருகலாக எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதுபோல் குருவம்மாள், க/பெ, குணபாலன் என்பவரும், அவரது மகன் பாண்டியும் சேர்ந்து என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். 20.04.2018 – என்ற வார்த்தைக்கு எடுத்து மாலை என்ற வார்த்தையும் இடைச்செருகலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதேபோல், குருவம்மாளும், அவரது மகனும் பாண்டியும், என்ற வார்த்தைக்கு நடுவே மருது என்ற பெயரும் இடைச்செருகலாக

சேர்க்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். புகாரில் யாரும் சாட்சிக் கையொப்பம் செய்யவில்லை என்றால், சரிதான். நான் வழங்கிய மனு ரசீதில் பாண்டி, குருவம்மா என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

(2) மேலும், மனுவின் தன்மை என்ற பகுதியில் Land Dispute என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதுபோல், பத்தி 8–ல் இடப் பிரச்சனை காரணமாக மனுதாரரை, எதிர்மனுதாரர்கள் மிரட்டியதாக புகார் மனு என தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். புகாரில் ரேவதி என்பவர் கையொப்பம் செய்துள்ளார் என்றால், சரிதான். ஆனால், மனு ஏற்பு ரசீதில் கையொப்பம் வித்தியாசமாக உள்ளது என்றால், சரிதான். புகார் கொடுத்த நபர்களிடம் கையொப்பம் பெற்றுதான் புகார் மனு ரசீது வழங்குவோம் என்றால், சரிதான். ஆனால், இந்த மனு ரசீதில் கையொப்பமானது, புகார்தாரரின் கணவரால் போடப்பட்டுள்ளது என்றால், சரிதான். மனு ரசீதில் 20.04.2018 என தேதி குறிப்பிடப்பட்டுள்ளேன் என்றால், சரிதான். புகார் கொடுத்த அன்றே ரசீது வழங்கப்பட்டுள்ளதா? என்றால், அவ்வாறுதான் வழங்கப்பட்டுள்ளது.

(3) நான் நீதிமன்ற முதல் விசாரணை வாக்குமூலத்தில் எந்த காவல் உதவி ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன் என குறிப்பிட்டுச் செல்லவில்லை என்றால், சரிதான். காவல் உதவி ஆய்வளார் திரு.மணியன் வசம் ஒப்படைத்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டபோதோ, கு.வி.மு.ச. 161 இன்படி வாக்குமூலம் பெறப்பட்டபோதோ நான் உடனில்லை என்றால், சரிதான். சிவில் வழக்கை கிரிமினல் வழக்காக மாற்றுவதற்காக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும், அது தெரியாமல் மனு ரசீது வழங்கியுள்ளேன் என்றாலும், சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.07.13 20:33:38 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தேனி.**